மலரும் மொட்டுக்கள்

பால மந்திர் கின்ஷிப் கேர் - உறவுமுறை பராமரிப்பு செய்திமடல்

முதல் பதிவு ● ● **ஏப்ரல் 2024**

பால மந்திர் – ஒரு அறிமுகம்

மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட மறைந்த திரு கே. காமராஜர் மற்றும் திருமதி எஸ். மஞ்சுபாஷிணி அவர்களால் 1949ஆம் ஆண்டு பால மந்திர் தொடங்கப்பட்டது. இன்று இது ஒரு முதன்மையான சமூக நல அமைப்பாக திகழ்ந்து வருகிறது. பால மந்திர் பல ஆண்டுகளாக பெற்றோர்களை இழந்த ஆதரவற்ற மற்றும் சமூகப் பொருளாதார ரீதியாக பின்தங்கி கடினமான சூழ்நிலைகளில் இருக்கும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்துவருகிறது. பால மந்திர் தன் பராமரிப்பில் உள்ள குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை நோக்கிச்செல்வதில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.





இந்த நிறுவனம் அதன் அனைத்து சேவைகளையும் சிறந்த வசதிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது –

1.குழந்தைகளுக்கான இல்லம் (கைக்குந்தைகள், சிறு குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்களுக்கு என தனித்தனி விடுதிகள்)

2. தமிழ் மற்றும் ஆங்கில வழியில் கல்வி கற்பிக்கும் தொடக்க மற்றும் உயர்நிலைப்பள்ளி.

3. சிறப்புத் தேவை உள்ள குழந்தைகளுக்கான தனி பள்ளி. இது பள்ளி என கூறுவதை விட அவர்களின் மறுவாழ்வு மையம் என்றே கூறலாம்.






கின்ஷிப் கேர் – உறவுமுறை பராமரிப்பு


கோவிட் 19 தொற்றுநோய்க்குப் பிறகு, பெற்றோர் ஒருவைரையோ அல்லது இருவரையுமே இழந்த குழந்தைகளுக்கு உதவும் நோக்கில் இந்த திட்டமானது, ஜூலை 2021ல் தொடங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குழந்தைகளில் பெரும்பாலானோர் தங்கள் குடும்பம் அல்லது உறவினர்களுடன் தங்கியிருந்தாலும், குடும்பத்திற்கு இன்னும் நிறைய ஆதரவுகள் தேவைப்பட்டன. கின்ஷிப் கேர் கடந்த 2 ஆண்டுகளில், குழந்தைகள் தங்களின் முழு திறனை அடைய ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளது







இந்த திட்டம் மூலம் குழந்தைகளின் படிப்புக்கு நிதி உதவி அளிப்பது மட்டுமல்லாமல் ஒவ்வொரு குழந்தையின் வாழ்க்கைத் திறன் மற்றும் தனித்திறன் முன்னேற்றத்திற்கான சேவைகளும் அளிக்கப்படுகிறது.

ஹாப்பி ரீடிங் - ஞான சாரதா என்ற தன்னார்வல தொண்டு நிறுவனத்துடன் இணைந்து ஹாப்பி ரீடிங் என்ற திட்டதின் மூலம் குழந்தைகளுக்கு ஆங்கிலம் வாசிக்க உதவி வருகிறது. . இது அவர்களின் ஆங்கில மொழித்திறனை வளர்ப்பது மட்டுமல்லாமல் அவர்களின் தன்னம்பிக்கையும் வளர்கிறது.







கை மேல் கல்வி -குழந்தைகளின் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் அடிப்படை ஆங்கில இலக்கணம் மற்றும் கணிதக் கருத்துகளை வலுப்படுத்த உதவும் வீடியோக்கள் மற்றும் ஒர்க்ஷீடுகளை உள்ளடக்கிய கைக்கணினி (Tabs) வழங்கப்பட்டு வழிநடத்தப்படுகின்றனர்.




ஆலோசனை ஆதரவு – தாய்மார்கள் தங்கள் துணையின் தீடீர் மரணம் காரணத்தால் ஏற்பட்ட மனச்சோர்வு மற்றும் பயத்திலிருந்து வெளிவர உதவுவதற்காக குழு ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.




வாழ்வாதாரம் – குழந்தைகளின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு, தாய்மார்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தையல் மற்றும் திறன் மேம்பாடு அல்லது தையல் இயந்திரம், வணிக வெட் கிரைண்டர், குளிர்சாதனப்பெட்டி போன்ற பொருட்களை வழங்குவதின் மூலம் வாழ்வாதார ஆதரவை வழங்கத் தொடங்கியது






கின்ஷிப் கேர் திட்டமானது எதிர்பார்த்ததைவிட மிக வேகமாக வளர்ந்துள்ளது. இப்போது சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, வேலூர், ராணிபேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 446 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 800 குழந்தைகள் சென்னை மையத்தின் மூலம் உதவி பெற்று வருகிறார்கள். ஜனவரி 2024ல் கோயம்புத்தூர் மையம் தொடங்கப்பட்டது. இச்சேவையானது கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள குழந்தைகளுக்கு உதவ தொடங்கியுள்ளது.



செய்தி துணுக்குகள்

பால மந்திர் 75வது ஆண்டு பவள விழா

மார்ச் 10, 2024 பால மந்திர் தனது 75வது ஆண்டு பவள விழா சென்னையில் மிகவும் சிறப்பாககொண்டாடப்பட்டது.. இந்த விழாவில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் பால மந்திரில் உள்ள அனைத்து முக்கிய நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், ஒரு பகுதியாக அறக்கட்டளையின் செயல்பாடுகள் குறித்து குறும்படம் திரையிடப்பட்டது. மேலும் பால மந்திர் வரலாறு குறித்த புத்தகமும் வெளியிடப்பட்டது. இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகள் பால மந்திரில் நடைப்பெற்றது.






தாய்மார்களுக்கு காப்பீடு

சென்னையில் கின்ஷிப் கேர் - ல் உள்ள எங்கள் குழந்தைகளில் ஒருவருக்கு நரம்புதளர்ச்சி ஏற்பட்டு மயக்கம் அடைந்து மருத்துவமனையில் அவர் ஒரு வாரம் அனுமதிக்கப்பட்டார். சமூக பணியாளரின் துணையுடன் அந்த தாயால் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அரசாங்க காப்பீடு அட்டையைப் பெற முடிந்தது. இதனால் மருத்துவமனை செலவுகளை அவரால் சுலபமாக கையாள முடிந்தது. இந்த குழந்தையின் தாய் ஒரு வீட்டு உதவியாளராக பணிபுரிகிறார். இவர் தன் முதலாளியிடம் இருந்து ஒரு கடிதம் பெற்று அதை வருமான சான்றிதழாகவும், ஆதார்அட்டை, இருப்பிட சான்று ஆகியவற்றின் நகலை சமூக பணியாளர் துணையுடன் ஆட்சியர் அலுவலகத்தில் காப்பீடு திட்டத்திற்கான பிரிவில் சமர்ப்பித்து காப்பீடு அட்டையைப்பெற்றார்.





தாய்மார்களுக்காக ஆரம்பக்கால குழந்தை பேணுதல் குழு:

கைக்குழந்தை மற்றும் சிறு குழந்தைகளுடன் (0-6வயது) இருக்கும் கின்ஷிப் கேர் தாய்மார்களுக்கு, ஆரம்பக்கால குழந்தை பேணுதல் மற்றும் பராமரிப்பு குறித்து தகவல்களை பகிர்ந்துகொள்ள வாட்ஸ் அப் மூலமாக அனைவரையும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதில் மூளை வளர்ச்சி, குழந்தை வளர்ச்சியின் வெவ்வெறு பரிமாணமங்கள் பற்றிய செய்திகள் பகிரப்பட்டுவருகிறது.





வேலூர் மருத்துவ முகாம்

21 ஜனவரி 2024ல் கின்ஷிப் கேர், ராணிபேட்டையில் உள்ள திருமலை மருத்துவமனையுடன் இணைந்து மருத்துவமனை வளாகத்தில் சுமார் 45 குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது மற்றும் தாய்மார்களுக்கு பெண்களுக்கான சிறப்பு பரிசோதனையும் நடத்தப்பட்டது





செய்திமடலின் ஆடியோ பதிப்பைக் கேட்க கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்

https://drive.google.com/file/d/1QoNPi-fBgWsNLvHqqv372GDOKTLf3MGJ/view?usp=drive_link